DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 201/2019**

**Deposition of LW39 Additional witness examined as PW25** Dt. 25.08.2026

| | |
|---|---|
| Name | நாகலட்சுமி (Inspector of Police) |
| Husband's Name | துரைசிங்கம் |
| Village | திருவிடைமருதூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| Taluk | திருவிடைமருதூர் |
| Age | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 25.08.2026

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவிடைமருதூர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.04.2019 ம் தேதி நள்ளிரவு 2.00 மணியளவில் பாலையூர் காவல் நிலைய காவல் ஆய்வாளராகிய நான் கிராம ரோந்தில் இருந்த போது மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சென்று அங்கிருந்து சிகிச்சையில் இருந்த வழக்கின் புகார்தாரர் பாலையா மகன் பார்த்தசாரதி என்பவரை விசாரித்து புகார்வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண். 57/2019 இதச பிரிவுகள் 279, 337, 304(A) ன் கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 6 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செந்தில்ராஜ், கொல்லிமலை ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தார். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு 7.30 மணிக்கு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்று சவக்கிடங்கு முன்பு இவ்வழக்கின் விபத்தில் இறந்த விநாயகராஜா என்பவர் பிரேதத்தின் முன்பாக 12.04.2019 ம் தேதி காலை 8.00 மணி முதல் 9.30 மணி வரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் அறிக்கையுடன் பிரேதத்தை SSI ரவிசந்திரன் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். பின்பு சாட்சிகள் மீனா, மாரியப்பன், பாலமுருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலத்தை தனித்தனியாக பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கில் இறந்து போன தனபால்

பிரேதத்தின் மீது 12.04.2019–ம் தேதி காலை 9.45 முதல் 11.15 மணி வரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் அறிக்கையுடன் பிரேதத்தை SSI சாமிநாதன் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் ஜோதி, உமா, மோகன்தாஸ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கு முன்பு இவ்வழக்கின் விபத்தில் இறந்த அருள்தாஸ் என்பவர் பிரேதத்தின் முன்பாக 12.04.2019 ம் தேதி காலை 11.30 மணி முதல் 13.00 மணி வரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிரேத பரிசோதனக்காக வேண்டு கோள் அறிக்கையுடன் பிரேதத்தை காவலர் கலைசெல்வன் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். பின்பு சாட்சிகள் ராஜலட்சுமி, ராமதாஸ், பாஸ்கர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலத்தை தனித்தனியாக பதிவு செய்தேன்.

அன்றைய தினமே மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த புகார்தாரர் பார்த்தசாரதி, காயம்பட்ட சாட்சிகள் செந்தில்குமார், சீனிவாசன், திருநாவுக்கரசு, ராஜேந்திரன், பாலு, கார்த்தி, பொன்னுசாமி, முருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலத்தை தனித்தனியாக பதிவு செய்தேன். 13.04.2019 ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பாண்டியன், பிச்சை, வரதராஜன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலத்தை தனித்தனியாக பதிவு செய்தேன்.

இவ்வழக்கில் காயம்பட்ட மதியழகன் திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் பேச முடியாத நிலையில் இருந்ததால் அவரது மனைவி சாட்சி கலைசெல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 15.04.2019–ம் தேதி தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மதியழகன் சிகிச்சை பலன் அளிக்காமல் அன்று நள்ளிரவு 1.20 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைத்த தகவலை பெற்று தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சவக்கிடங்கு முன்பு இவ்வழக்கின் விபத்தில் இறந்த மதியழகன் என்பவர் பிரேதத்தின் முன்பாக 15.04.2019 ம் தேதி காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் அறிக்கையுடன் பிரேதத்தை SI சார்ஜ்ராஜா என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். பின்பு சாட்சிகள் கலைசெல்வி, சக்திவேல், ஆசைபிள்ளை ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலத்தை தனித்தனியாக பதிவு செய்தேன்.

கடந்த 24.04.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது இவ்வழக்கின் எதிரி மாரிமுத்து நிலையம் முன்பு ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனைக்கு பிறகு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அன்றையதினமே இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட வாகன மான TN 68X 9856 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா Supero Mini truck என்ற 4 சக்கர லோடு வாகனத்தை மயிலாடுதுறை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். இத்துடன் எனது புலன்விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக மயிலாடுதுறை உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக DSP அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரை யார் பெற்றது என்றால் நான் தான் பெற்றேன். எழுத்து மூலமாக புகார் பெற்றேன் என்றால் சரிதான். சம்பவ சாட்சிகளாக தனிப்பட்ட நபர்களை நான் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வயலும், சுடுகாடும் உள்ள இடம் என்பதால் சம்பவ சாட்சிகள் இல்லை. அதனால் சம்பவ சாட்சிகளாக யாரையும் நான் விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம் என்றாலும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி இருட்டான பகுதி என்றாலும் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலை ஒரு வண்டி மட்டுமே செல்லக்கூடிய சாலை என்றால் சரியல்ல. இரண்டு வாகனங்கள் செல்லக்கூடிய அளவு உடைய சாலையாகும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலை அகலம் என்ன என்றால் 15 அடி தார்சாலை ஆகும். முதல் தகவல் அறிக்கை வரிசை எண் 4-ல் புகாரின் வகை எழுத்து மூலமாக என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாறாக புகார் வாக்குமூலமாக பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் அந்தப் பகுதியில் வசிக்கக்கூடிய நபர்கள் இல்லை என்றால் சரிதான். மகசர் சாட்சிகளை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்து கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை சுருக்க பகுதியில் மதியழகன் என்ற பெயர் ஒயிட்ணர் வைத்து அழித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் மகாலிங்கம் மகன் முருகன் என்ற பெயர் இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சரிவர விசாரித்து புகார் வாக்குமூலம் பெறாத காரணத்தால்தான் இந்த பிழைகள் முதல் தகவலை அறிக்கையில் ஏற்பட்டது என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் இருந்த சங்கதிகள் முதல் தகவல் அறிக்கையில் விடுபட்ட காரணத்தால் அவ்வாறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 னின் சத்தம் கேட்டு அருகில் உள்ளவர்கள் ஓடி வந்து எங்களை தூக்கி 108 ஆம்புலன்ஸ் மூலம் மயிலாடுதுறை அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு அருகில் உள்ள நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் பார்த்தசாரதி விபத்து நடந்ததாக சொல்லப்படும் வாகனத்தில் எங்கு அமர்ந்திருந்தார் என்பதை புகார் வாக்குமூலத்திலோ, எனது விசாரணையிலோ

குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் புகார்வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும், சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகசர், வரைபடம் தயார் செய்யபடவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் பிரேத விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கைகள், பார்வை மகசர், வரைபடம் ஆகியவை வழக்கிற்கு ஏற்றாற்போல் காவல்நிலையத்தில் வைத்தே தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன நாள், நேரத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை, வாக்குமூலங்களை வழக்கிற்கு ஏற்றாற்போல் தன்னிச்சயைாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

மேற்கண்ட வழக்கு ஆவணங்களை ஆய்வாளர் சந்திரசேகர் அவர்கள் பணி மாறுதல் காரணமாக ஆய்வாளர் அனந்தபத்மநாபன் என்பவரிடம் ஒப்படைத்துள்ளார் அவர் அதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இ ந்த வழக்கின் இறந்து போன அய்யப்பன் என்பவரின் உடலை பிரேத பரிசோதனை செய்த சிதம்பரம் மருத்துவமனை மருத்துவர் முத்துக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் கொடுத்த பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றுள்ளார். **அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கில் காயப்பட்ட அ.சா.2,3,4 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் பொன்ராஜேந்திரன், சித்தார்த்தன், சரத்பாபு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்கள் கொடுத்த காயச்சான்றிதழ்களை பெற்றுள்ளார். **அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ.9 முதல் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** விபத்தில் உட்பட்ட வாகனங்களை ஆய்வு செய்த மோம்டார் வாகன ஆய்வாளர்கள் ராம்குமார் மற்றும் காஞ்சி என்பவர்களை விசாரணை செய்து வாக்குமூலும் பதிவு செய்துள்ளார். அவர்கள் கொடுத்த **TN 51 V 6962 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.12 ஆகவும், TN 82 Y 7669 என்ற பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** மருத்துவர்கள் கொடுத்த சான்றில் அ.சா.2,3,4 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் இந்த வழக்கின் இதச 279, 337, 304(A) சட்டப்பிரிவுகளை இதச 279, 338, 304(A) சட்டப்பிரிவுகளாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், எதிரி மீதான விசாரணையை முடித்து கடந்த 08.02.2021 ம் தேதி இதச பிரிவுகள் 279, 338, 304(A) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 16/2022**

**Deposition of LW14 examined as PW9** (Investigation Officer)

Dt. 30.06.2025

| | |
|---|---|
| Name | விசித்திராமேரி (Inspector of DCB MYD) |
| Father's/Husband's Name | ஜோன் பிரதீப் |
| Village | |
| Taluk | மயிலாடுதுறை |
| Age | 47/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 30.06.2025

(Accused present. )

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை மாவட்ட குற்றப்பிரிவு (நிலஅபகரிப்பு சிறப்பு தடுப்பு பிரிவு) காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.09.2021ம் தேதி பாலையூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் குமரவேல் பணியில் இருந்த போது பாலையூர் காவல் நிலைய குற்ற எண். 550/2021 இதச பிரிவுகள் 279,337,304(A)ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கை மேல் விசாரணை செய்யும் பொருட்டு என் பார்வைக்கு வைத்ததை நான் மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடம் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கின் எதிரியான விஜயகுமார் என்பவரை கடந்த 29.09.2021 அன்று பகல் 11.30 மணிக்கு பாலையூர் காவல் நிலைய முன்பு நின்று கொண்டிருந்த எதிரியை குற்றக்காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இந்த வழக்கில் இறந்த ராமமூர்த்தி என்பவரை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கலைசெல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் கொடுத்த பிரேத பரிசோதனை அறிக்கையினை பெற்றேன். **அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கில் காயம் பட்ட லோகநாதன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்

பிரபாகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் கொடுத்த காயச்சான்றினை பெற்றேன். **விபத்து பதிவேடு அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **காயச்சான்று அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது** இந்த வழக்கில் ஈடுபட்ட வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன தணிக்கை ஆய்வாளர் ராம்குமார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் கொடுத்த ஆய்வு அறிக்கைகளை பெற்றேன். PY 02 L 4241 என்ற இருசக்கர வாகனத்திற்கான **வாகன தணிக்கை அறிக்கை அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. TN 82 9454 என்ற இருசக்கர வாகனத்திற்கான வாகன தணிக்கை அறிக்கை அ.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து கடந்த 15.10.2021 அன்று இதச பிரிவுகள் 279,337,304(A)ன் கீழ் குற்றக் இறுதி அறிக்கை நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சாலையானது வளைவான சாலை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் அவர்களை நான் விசாரணை செய்த போது புகார் ஆனது காவல் நிலையத்தில் வைத்து போலீசாரால் எழுதப்பட்டது இந்த விபரத்தை தெரிவித்தாரா என்றால் இல்லை. இந்த விபத்திற்கு காரணம் இறந்து போனவர் அவரது வாகனத்தை அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் வளைவான சாலையில் இயக்கியதால் தான் ஏற்பட்டது என்றாலும், அவருக்கு ஆதரவாக புகார் காவல் நிலையத்தில் வைத்து எதிரிக்கு எதிராக உற்பத்தி செய்து அதன் அடிப்படையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் அனைவரும் அ.சா.1 க்கு வேண்டப்பட்ட சாட்சிகள் என்றால் சரியல்ல. பார்வை மகசர், மாதிரி வரைபடம் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இறந்து போனவருக்கு இழப்பீடு பெற்று தர வேண்டும் என்பதால் இறந்தவரின் கவனக்குறைவு, அதிவேகத்தை மறைத்து எதிரி மீது பொய்யாக புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.